வகை செய்யப்படவில்லை. ஆனால் அவர்களின் வசதி குறித்து பார்வையாளர் மாடங்களில் ஒருசில இருப்பிடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த மாடங்களிலும் மேலவை உறுப்பினர்களோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களோ தங்களது அடையாளச் சீட்டுகளைக் காண்பித்து அமரலாம். மாடங்களிலே பார்வையாளர்கள் யாராக இருப்பினும் பேரவையில், மேலவையில் அனுமதிக்கப்படுவதும், மறுக்கப்படுவதும் அந்தந்த அவைத் தலைவர்கள் ஏற்படுத்தும் விதிகளுக்கும், அவையின் விதிகளுக்கும் உட்பட்டதாகும்.

தேவையென்றால், நிர்வாக வசதிக்கேற்ப அனுமதி மறுப்பதும் அல்லது அனுமதி கொடுக்கப்பட்டு மாடங்களில் உள்ளவர்களை வெளியேற்றுவதும் பேரவைத் தலைவரின் உரிமையாகும். நமது அவைகளில் கட்டிட அமைப்புகள் தற்போதைய தேவைகளுக்கேற்ப அமையவில்லையாதலால் உறுப்பினர் பார்வையாளர் எல்லோருக்கும் வசதிகள் செய்து கொடுக்க இயலவில்லை.

மேலும், ஒரு அவைபற்றி மற்றொரு அவையில் உரிமைப் பிரச்சினை எழுப்புவது இரு அவைகளுக்கும் உள்ள சுமுக உறவைக் குலைப்பதாக அமையும். இதுபற்றி உறுப்பினர்கள் ஏதேனும் எழுப்ப வேண்டுமென்றால் பேரவைத் தலைவர் அறையில் அவரைச் சந்தித்து கலந்தாலோசித்து ஆவன செய்யலாம். எனவே இவ்வாறு அவையில் எழுப்புவது முறையாகாது. மேலும் இந்த மன்ற உறுப்பினர்களுக்கு மேலவையில் அதன் விவாதங்களைக் கவனிப்பதற்குத் தனியாக இடம் ஒதுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இதில் மேலெழுந்த வாரியாகக் கூட உரிமைப் பிரச்சினை எதுவும் எழவில்லை. மேலவைத் தலைவருடன் கலந்தாலோசித்து அங்கு இப்பேரவையில் உறுப்பினர்களுக்கு விவாதங்களை கவனிப்பதற்கு இடம் ஒதுக்க ஏற்பாடு செய்யலாம்.

எனவே இதில் உரிமைப் பிரச்சினை எதுவும் எழவில்லை. பிரச்சினையை இத்துடன் விட்டுவிடலாம். மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் தேவையில்லை.

[முற்பகல் 10–20]

## (4) ஒழுங்குப் பிரச்சினை.

### உறுப்பினர் கொடுத்த தீர்மானம் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு செ. இராமலிங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர். 41 வது விதியின்கீழ் சென்ற மாதம் நான் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். பேரவைத் தலைவர் அவர்கள் 16–2–1979 அன்று

அதை அனுமதித்திருப்பதாக எனக்கு தகவல் தந்திருக்கிறீர்கள். ஆனால் இதுவரையில் அந்தத் தீர்மானம் அவைக்கு வரவில்லை. எதற்கெடுத்தாலும் விதி விதி என்று.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியின் கீழ்தான் நான் இங்கு அமர்ந்திருக்கிறேன். அதுவே எனக்கு பாதுகாப்பு இல்லை என்றால் திரு. இராமலிங்கம் அவர்களது கவன ஈர்ப்புத் தீர்மானம் என்ன நிலையில் இருக்கிறது என்பதைப்பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் கேட்டு கூடுமான வரையில் ஆவன செய்கிறேன்.

## (5) கவனஈர்ப்புகள்.

### (அ) மழையினால் பாதிக்கப்பெற்றுள்ள தஞ்சை மாவட்டத்தில் கெடுபிடியாக நிலவரி வசூல் செய்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு மா. மணிமாறன் அவர்கள் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, "1978 ஆம் ஆண்டு அக்டோபரில் தொடங்கிய மழை, வழக்கத்திற்கு மாறாக 1979 ஆம் ஆண்டு சனவரி இரண்டாவது வாரத் தொடக்கம் வரை பெய்ததின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் விளைச்சல் குறைவினால் வேறு தொழிலோ வருவாயோ இல்லாமல் உணவிற்கும், சில்லறை செலவிற்கும் போதுமான விவசாய வருவாய் இல்லாத நிலையில், விவசாயிகளிடம் தனிவரி வசூலில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்வது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் பேரவைச் செயலர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு பி. முசிரிபுத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, புயல், மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி, தண்ணீர் மேல்வரி, சிறப்பு வரி ஆகியவற்றை தள்ளுபடி செய்து கொடுக்க வருவாய் வாரிய நிலை ஆணைகளில் வழிவகையுள்ளது.